[*1995 மார்ச் 31*

(ஆ) சிவகாசி அரசு மருத்துவமனை அறுவை சிகிச்சைக் கூட ஏர்க்கண்டிஷன் மிஷின்கள் இயங்காதது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஜெ. பாலகங்காதரன் அவர்கள் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி அரசு மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சைக் கூடத்தில் உள்ள 3 ஏர்க் கண்டிஷன் இயந்திரங்கள் இயங்காதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

சிவகாசி அரசு மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சைக் கூடத்தில் நிறுவப்பட்ட மூன்று ஏர்க்கண்டிஷன் மிஷின்களில் ஒன்று நல்ல நிலையில் இயங்கி வருகின்றது. மற்றைய இரண்டு மிஷின்களில் சிறு பழுதுகள் பார்க்கப்படவேண்டி உள்ளது. அவற்றில் வாயு கசிவு (Gas leakage) ஏற்பட்டுள்ளதால், அதனைத் தடுத்து மீண்டும் நிரப்பப்பட வேண்டியுள்ளது. இப்பணிகளை மேற்கொண்டு ஒரு வார காலத்திற்குள் முடித்துக் கொடுக்குமாறு ஏர்க்கண்டிஷன் மிஷின்கள் வழங்கிய நிறுவனத்தார் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி நகராட்சிக்கு சுமார் 2¼ கோடி ரூபாயை அள்ளி வழங்கிய கடை ஏழு வள்ளல்களை விஞ்சிய முதல் வள்ளல் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன. மேலும், சிவகாசி அரசு மருத்துவமனைக்கு 10 படுக்கைகள் கொண்ட தீக்காய சிகிச்சைப் பிரிவும் இந்த நவீன அறுவை சிகிச்சைக் கூடமும் கொடுத்த எங்களுடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியை உரித்தாக்கி இங்கே விவர அறிக்கையில்

உள்ளபடி அங்கே 2 ஏர்க் கண்டிஷன்கள்தான் பழுதுபட்டு இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்த அறுவை சிகிச்சைக் கூடத்திலே இருப்பது 3 ஏர்க் கண்டிஷன் மெஷின்கள். நான்காவது ஒன்று தீக்காய சிகிச்சை பிரிவுக்காக ஃபையர் வொர்க்ஸ் அஸோஸியேஷனிலிருந்து இலவசமாகக் கொடுக்கப்பட்டது. அந்த ஏ.சி. மெஷின்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதைத்தான் டெம்ப்ரரியாக இந்த அறுவை சிகிச்சைக் கூடத்தில் வைத்திருக்கிறார்கள். இங்கே இருக்கின்ற அந்த 3 ஏர்க் கண்டிஷன் மெஷின்களிலே கேஸ் லீக்கேஜ் என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கேஸ் லீக்கேஜ் இருந்தால் ஃபேனாவது ஓட வேண்டும். அந்த ஃபேனும்கூட ஓடாமல் மிக மோசமான நிலையில் இருக்கிறது. தற்சமயம் அங்கே அறுவை சிகிச்சைகூட மேற்கொள்ள முடியாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலை காரணத்தால் உடனடியாக அமைச்சர் அவர்கள் தலையிட்டு within a week என்ற காலக்கெடுவை மாற்றி within two days என்று முடிவு எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக அதிகாரிகளுக்கு அரசின் சார்பிலே அறிவுறுத்தப்பட்டிருக்கிறது, உடனடியாக அந்த மெஷின்களைப் பழுது பார்க்க வேண்டும் என்று. அவர்கள் ஒரு வார காலத்திற்குள்ளே சரி செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதற்கு முன்னதாகவே பழுதுபார்க்க வேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆகவே, குறைந்த கால கெடுவிற்குள் அந்த ஏர்க் கண்டிஷன் மெஷின்களை எல்லாம் பழுதுபார்த்து உரிய நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: தலைவர் அவர்களே, every week, we used to conduct three operations in the Government Hospital என்று எனக்கு அரசு மருத்துவ அதிகாரி தகவல் கொடுத்திருக்கிறார்கள். இப்போது, --'because of the air-tightened room- அது ஏர்கண்டிஷன் ரூமாக இருப்பதால், there is no ventilation; we are maintaining it as a sterile room' என்று மருத்துவ அதிகாரி எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார். அதனால் அங்கே இப்போது அறுவை சிகிச்சை நடத்த முடியாமல் இருக்கிற காரணத்தால் கிட்டத்தட்ட 3 மாதங்களாக அறுவை சிகிச்சைகளைத் தள்ளி வைத்துக்கொண்டே வந்து கொண்டு இருக்கிறார்கள். எனவே, பொதுப்பணித்துறையில் உள்ள மற்ற

இடங்களில் உள்ள ஏர்க் கண்டிஷன் மெஷின்களையாவது உடனடியாக இந்த மெஷின்களைப் பழுது நீக்கம் செய்யும்வரை ஷிப்ட் செய்து வைப்பாரா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: தலைவர் அவர்களே, ஆங்காங்கே அந்தந்த மருத்துவமனைகளிலே இருக்கின்ற மெஷின்களை மாற்று ஏற்பாடாக பெரும்பாலும் மாற்றுவது கிடையாது. ஏனென்றால் அந்தந்த மருத்துவ மனைகளிலே, அங்கேயே அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே மற்ற பணிகள் அங்கே பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தினாலும் அதை மாறறுவது என்பது இயலாது. ஏற்கெனவே சரியான முறையிலே அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் உடனடியாக அதைச் செய்து முடிப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ். ஜெயக்குமார், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. எஸ். ஜெயக்குமார்: பேரவைத் தலைவர் அவர்களே, *1994–95*ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் *35* மற்றும் *36*-வது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறேன்.

முற்பகல் 10–55

9. வரவு-செலவுத் திட்டம், 1995-96, பொது விவாதம்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1995–96* ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதமும், பதிலுரையும். திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1995–96* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது கருத்துக்களைக்